தமிழ் இணையக் கல்விக்கழகம்
சென்னை - 600 025.

இளநிலைத் தமிழியல் - பட்டம் **(B.A. TAMILOLOGY - Degree)**

நான்காம் பருவம்

நேரடி எழுத்துத் தேர்வு **(OFF - LINE WRITTEN EXAMINATION)**

மே, சூன் - **2017**

**A041** இலக்கிய வரலாறு

காலம் : 3 மணி நேரம் மதிப்பெண்கள் : 75

(குறிப்பு : பிரிவு - 1இல் இருந்து எல்லா வினாக்களுக்கும் விடை தர வேண்டும். விடை ஒன்றிற்கு ஒரு மதிப்பெண். பிரிவு - 2இல் இருந்து ஐந்து வினாக்களுக்கு விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் ஒரு பத்திக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 3 மதிப்பெண்கள். பிரிவு - 3இல் இருந்து மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் 3 பக்கங்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 15 மதிப்பெண்கள்.)

பிரிவு - 1

ஒரு சொல் / தொடரில் விடை தருக. **(15x1=15)**

1. பூதத்தாழ்வார் பிறந்த ஊர் எது?
2. விநாயகர் போற்றி எழுந்த முதல் தமிழ் நூல் எது?
3. அருணகிரிநாதர் படைத்த நூல்கள் யாவை?
4. காலத்தால் பழமையான உலா நூல் எது?
5. மூன்று ஆழ்வார்கள் சந்தித்த இடம் எது?
6. பாட்டியல் நூல் கூறும் இலக்கணம் யாது?
7. தேசிகப் பிரபந்தத்தில் உள்ள பாடல்களின் எண்ணிக்கை எத்தனை?
8. கனா நூல் எதைப் பற்றிக் கூறுகிறது?
9. சிவஞானம் பெற்று பிறவியை நீக்குவதற்கு இன்றியமையாதது எது என்று திருமூலர் வலியுறுத்துகிறார்?
10. தமிழ்விருத்தப் பாவால் எழுதப்பட்ட முதல் காப்பியம் எது?
11. பெருமால் ஜீயரின் நூல்கள் யாவை?
12. வாழும் தமிழ் என்ற நூலை எழுதியவர் யார்?
13. மணிமேகலைக்குத் தருமத்தைப் போதித்தவர் யார் ?
14. எட்டாம் நூற்றாண்டில் தோன்றிய சமண சமய நூல்கள் யாவை?
15. கண்டன் என்பது எம்மன்னனுக்குரிய சிறப்பு பெயர்?

## பிரிவு - 2

**எவையேனும் <u>ஐந்து</u> வினாக்களுக்கு <u>ஒரு பத்தி அளவில்</u> விடை தருக. (5x3=15)**

1. சிறுபாணாற்றுப்படை பற்றி எழுதுக.
2. தகடூர் யாத்திரை விளக்குக.
3. கலிங்கத்துப்பரணி பற்றி விளக்குக.
4. குழந்தை இலக்கியம் படைத்த அழ வள்ளியப்பாபற்றி எழுதுக.
5. மூவர்க்குள் முதல்வன் யார்?
6. திருச்சந்தம் பற்றி விளக்குக.
7. பரிமேலழகரின் திருக்குறள் உரை பற்றி எழுதுக.
8. சீகன் பால்க் ஐயர் பற்றி குறிப்பு வரைக.

## பிரிவு - 3

**<u>மூன்று பக்கக் கட்டுரை வடிவில்</u> விடை தருக. (3x15=45)**

1. (அ) வைணவ இலக்கியங்களைப் பற்றி விவரிக்க.

(அல்லது)

(ஆ) சிற்றிலக்கியங்களும் பல்துறைகளும் பற்றி விளக்கி எழுதுக.

2. (அ) அற்புதத் திருவந்தாதி, திரு இரட்டை மணிமாலை பற்றி விளக்குக.

(அல்லது)

(ஆ) இலக்கிய இலக்கண உரைகளைப் பற்றி விவரிக்க.

3. (அ) காப்பியங்கள், புராணங்கள் பற்றி இலக்கிய வரலாற்று நோக்கில் விவரிக்க.

(அல்லது)

(ஆ) பத்திரிக்கையும் உரைநடை வளர்ச்சியும் குறித்து விவரிக்க.

***